## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தனது ஒருங்கிணைந்த நடமாடும் கொன்சியூலர் சேவையை நுவரெலியா மாவட்டத்தில் 2019 செப்டம்பர் 14ஆந் திகதி நடாத்தவுள்ளது

நுவரெலியா மாவட்டம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளிலுள்ள மக்களுக்கு கொன்சியூலர் மற்றும் பிற வகையான உதவிகளை வழங்குவதற்காக, நுவரெலியா மாவட்ட செயலகத்துடன் இணைந்து ஒருங்கிணைந்த நடமாடும் கொன்சியூலர் சேவையொன்று 2019 செப்டம்பர் 14 ஆந் திகதி சனிக்கிழமை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற உள்ளது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன அவர்கள் 2019 செப்டம்பர் 14 ஆந் திகதி இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியன இந்த ஒருங்கிணைந்த நடமாடும் கொன்சியூலர் சேவையில் கலந்துகொள்ளவுள்ளன.

இந்த நடமாடும் சேவையின் மூலம், நுவரெலியா மாவட்டம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி போன்ற தேவைகளுக்காக ஆவணங்களை சான்றுறுதிப்படுத்தல், வெளிநாடுகளில் கைவிடப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையர்களின் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குதல், வெளிநாடுகளில் நிகழ்ந்த பிறப்புக்கள், திருமணங்கள் மற்றும் இறப்புக்களை பதிவு செய்தல், இழப்பீடுகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான உதவி, வெளிநாடுகளில் இருந்து பொலிஸ் தடைநீக்கச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான உதவி மற்றும் வெளிநாடுகளில் நிர்க்கதியான மீனவர்கள் / பணியாளர்கள் மற்றும் கப்பல்களுக்குக்கான உதவி ஆகியன உள்ளடங்கலான கொன்சியூலர் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**
**கொழும்பு**

**06 செப்டம்பர் 2019**